www.padippakam.com

# வானதியின் கவிதைகள்



Liberating Tigers Of
TAMIL EELAM

படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

# வானதியின்

# கவிதைகள்



**கப்டன் வானதி**
(பத்மசோதி சண்முகநாதபிள்ளை)

வெளியீட்டுப்பிரிவு
தமிழீழ விடுதலைப் புலிகள்

படிப்பகம்

www.padippakam.com

**வானதியின் கவிதைகள்**
(கவிதைத் தொகுப்பு)

**கப்டன் வானதி**
(பத்மசோதி சண்முகநாதபிள்ளை)

**முதற்பதிப்பு - 1991 மார்கழி**

வெளியீடு:-
**வெளியீட்டுப்பிரிவு, தமிழீழ விடுதலைப் புலிகள்**

**மறுபதிப்பு: 1993 மார்கழி**

மறுவெளியீடு:-
**தமிழீழ விடுதலைப் புலிகள் - ஜேர்மன் கிளை**
[redacted]
**Post Fach 11 32**
**52437 Linnich**
**GERMANY**

படிப்பகம்

# முன்னுரை

**வானதி.........**

இவளை நான் கண்டு கொண்டதும், இவளை நான் அறிந்து கொண்டதும் இவள் கவிதையில் இருந்து தான்.

அமைதியை நிலை நாட்டுவதாகக் கூறிக்கொண்டு இந்திய இராணுவம் தமிழீழ மண்ணை ஆக்கிரமித்திருந்த வேளை அது. அச்சத்தால் உறைந்து...... அங்குமிங்கும் தலையை அசைக்கவே முடியாது மக்கள் வாழ்ந்து கொண்டிருந்த காலம். அந்தநேரத்தில் சோதியின் (வானதி) கவிதைதான் அவளை எனக்கு இனம் காட்டித் தந்தது.

தான் பயின்ற தொழில்நுட்பக் கல்லூரியில் தியாகி திலீபனது நினைவு நாளின் போது இவள் எழுதி வாசித்த கவிதைதான் வானதியை எங்களுடன் இணைத்துவிட்டது.

ஆம்!

நெருக்கடிகள் மத்தியிலும் வாழக் கற்றுக் கொண்டவள் வானதி. எத்தகைய நெருக்கடியான சூழ்நிலையிலும் உறுதியுடன் நின்று போராடுகின்ற மனோபலம் படைத்தவள். வானதியின் கவிதைகள் வரலாற்றின் பக்கங்களை நிறைத்து நிற்பவை.

வாழ்க்கையை தீர்க்க தரிசனமாகப் புரிந்து கொண்ட இப் பெண்ணினது இதயம் மிகவும் மென்மையானது. ஆனால் உறுதியானது -இவள் கவிதைகளைப்போல.

வீரத்தையும் தியாகத்தையும் தன் குருதியில் நிறைத்துக் கொண்டவள் இவள்.

கானகத்தை
காற்றை
கடலலையை
குளிர் நிலவை......

கனமாகத் தேடி இவளின் கவிதைகள் அலையவில்லை.

களத்திலே வீரமரணத்தை தழுவிக்கொண்ட வீரமறவர்களின் தியாகத்தில் இவள் கவிதைக் கருவைக் கண்டு கொண்டாள்.

ஒப்பற்ற தலைவனின் வழிநடத்தலில், படை நடத்தலில் செயற்படுவதில் பூரிப்படைந்தாள் வானதி. அவளது உணர்வலைகளை,

பாரதத்து பாரதியால்
பாட்டில் மட்டுமே
காட்ட முடிந்த
'புதுமைப் பெண்'களை
இவனோ
காட்டிலே உருவாக்கி
களத்திலே காட்டுகின்றான்.

என்ற கவிதை அடிகள் புலப்படுத்தி நிற்கின்றன. பெண்ணாக நின்று புலியாகப் போராடுவதில் பெருமை கொண்டவள் வானதி. அந்தப் பூரிப்பில் அவள் தலை நிமிர்ந்து நின்றாள்.

சத்தியத்தை நேசிக்கும் உறுதி பூண்ட நெஞ்சம் இவளுடையது. இவளுடைய கவிதைகளிலே நிறைந்திருப்பது எல்லாம் இதுதான். உண்மையை உரைப்பதற்காக இவளது பேனா என்றும் தயங்கியதில்லை.

ஆம்:

இவளது பேனா கூரானது
இவளது துப்பாக்கியை விட

www.padippakam.com

சிலாவத்துறை முகாம் தாக்குலின் போதும், ஆனையிறவு தளம் மீதான தாக்குதலின் போதும்....

பதுங்குகுழி இல்லை.

காப்பரண் இல்லை - என்றாலும் அசையாத மனவலிமை என்னும் அரண் எமக்கு உறுதுணையாக உள்ளது என்று மன வலிமையுடன் நின்று போராடியவள் வானதி. அவளது வீரம், தியாகம், அர்ப்பணிப்பு என்பவற்றை அளவிட முடியாத இலட்சியப் பற்றின் ஆழத்தை அவளது கவிதைகள் எமக்கு காட்டி நிற்கின்றன.

இந்தக் கவிதைகள் வானதியை ஒரு வீரவேங்கையின் நெஞ்சத்துணர்வுகளை நீங்கள் நெருக்கமாக நின்று தரிசிக்க களம் அமைத்து தந்துள்ளன.

ஆம்!

நாங்கள் கொடுத்து வைத்தவர்கள்.

இன்று...... தன் கவிதையை தொடரும் பொறுப்பை வானதி எங்களிடம் விட்டுச் சென்றிருக்கின்றாள்.

எல்லையில் இவளின் துப்பாக்கி எழுந்து நிற்கிறது......
எங்கள் இதயங்களிலே இவளது இலட்சிய தாகம்.

**புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்**

**ஜெயா**
**பொறுப்பாளர்,**
**விடுதலைப்புலிகள் மகளிர் முன்னணி**

www.padippakam.com

**கப்டன் வானதி**
(பத்மசோதி சண்முகநாதபிள்ளை)
பிறப்பு:- 19-02-1964
இடம்:- 174, கோவில் வீதி, நல்லூர்,
யாழ்ப்பாணம்

ஆனையிறவுச் சமரில் பெண் போராளிகள் குழு ஒன்றிற்குத் தலைமைதாங்கிச் சென்றார்.

ஆனையிறவு படைத்தளத்தின் ஒரு பகுதியான தடைமுகாம் -மீதான தாக்குதலின்போது 11-07-1991 இல் வீரமரணம் அடைந்தார்.

படிப்பகம்

www.padippakam.com

# வேங்கைகளின் வேந்தன்

தமிழினம் தொலைத்துவிட்ட
சுதந்திரத்தைத்தேட
தமிழினம் விற்றுவிட்ட
தன்மானத்தை மீண்டும் மீட்க
தலைநிமிர்ந்த மனிதனை
தமிழீழம் காண
வீரத்தாயின்
பிரசவ வேதனையின் பின்னால்
ஓர் ஜனனம்!

அன்றைய குழந்தைதான்
இன்றைய
"வேங்கைகளின் வேந்தன்"



படிப்பகம்

www.padippakam.com

அன்றைய - அந்த
குழந்தைச் சிரிப்பு
இன்றும் இவனுடன்
கொஞ்சிக்குலாவும்
அந்தக் குழந்தையுள்ளம்
இன்றும் இவனுடன்
சொந்தம் பேசும்
அந்தப் பிஞ்சுக்கால்களின்
பூப்போன்ற மென்மை
இன்றும்
இவன் இதயத்துள்
இமயமளவுயரத்தில் !

வீரம்
அது இவன்
காலடிச்சுவடுகளிலிருந்து
விழித்துக்கொள்ளும்

இவனது
சுதந்திரச் சிறகுகள்
அகலமானவை
மிக. . . . மிக. . . . . . . அகலமானவை
அதனால்
இவனைச் சிறைவைக்க
முயன்றவர்கள்
தங்களையே சிறைக்குள்
போட்டுக்கொண்டார்கள்.

இராமனின் சந்தேகம் தீர
சீதையின் தீக்குளிப்பை
பாரதம் பாராட்டி
பத்தினியென்று பூச்சூடுகின்றது !



படிப்பகம்

www.padippakam.com

ஆனால் - இங்கே
இவனோ
வாழ்வின்
ஒவ்வோர் அத்தியாயத்தை
புரட்டும் போதும்
ஓராயிரம் தடவைகள்
தீக்குளிப்பு செய்கிறானே!
யாருக்கிந்த
யதார்த்தம் தெரியப்போகிறது?

இவன்
எல்லாவற்றையுமே
தனக்குரியதாக்கி
எதையுமே
தனக்கென்று
சொல்லத்தெரியாதவன்!

ஆசைக்கு கூட
ஓர் ஆசை
இவன் - எதிலாவது
ஆசைகொள்ளமாட்டானா ? என்று

அச்சத்துக்குக் கூட
இவனிடம் அச்சம்
அதனால் இவனை
அண்டியதே இல்லை.

பாரபட்சம் - அது
இவனுடன் பாசங்கொண்டாடியதேயில்லை
வரலாற்றை வழிகாட்டியாக
வரித்துக்கொண்டவன்
இன்று - ஓர் வரலாற்றுக்கே
வழிகாட்டியாகிவிட்டான்!



படிப்பகம்

www.padippakam.com

இயற்கையை நண்பனாக்கியவன்
இன்று இயற்கைக்கே
நண்பனாகிவிட்டான்,

வாழ்க்கையை
தத்துவாசிரியனாக ஏற்றவன்
இன்று தமிழீழத்தின்
வாழ்க்கைக்கே
தத்துவாசிரியனாகி விட்டான்

இவன் கைகள் மட்டுமே
ஆயுதம் ஏந்தும்
இவன் கண்களோ
கருணை வெள்ளத்துள் நீந்தும்

அன்புக்கு
அர்த்தம் பார்ப்பதற்கு
அகராதியைத்தட்டுவதை விட
இவனது
ஒவ்வோர் அணுகு முறையிலும்
ஓராயிரம் அர்த்தங்களை
படித்துக்கொள்ளலாம்

பாரதத்துப்பாரதியால்
பாட்டில் மட்டுமே
காட்ட முடிந்த
'புதுமைப் பெண்'களை
இவனோ
காட்டிலே உருவாக்கி
களத்திலே காட்டுகிறான்!



படிப்பகம்

சமூகத்தின்
பிற்போக்கு சிந்தனைகள்
இவனது சீற்றத்தீயினால்
வெந்து....... வெந்து
சாம்பலாகியபடியே........!........!

'எழுதி...... எழுதி......
எத்தனை எழுதியும்......
இவனைப் பற்றி
சொல்ல முடிவது
சொற்பமே !
சொல்லக் கிடப்பதோ
மிச்சம்!

உலகத்தின் கணிப்பில்
உன்னத ஸ்தானத்தை..... தன்
உரிமையாக்கியவன்.
உண்மையின் உறவுடன்
உருவாகிக் கொண்டிருக்கும்
தமிழனின் தனிநாட்டில்,
தமிழீழத்தில் - நாளை
தேசியக் கொடியில்
சேனை அசைந்திடும்
வேங்கையின் வேந்தனின்
"வீரம்" வென்றிடும் ! ! !

26-11-1989 அன்று தலைவரின் பிறந்த நாளுக்கு வாழ்த்துக்கூறி எழுதப் பெற்ற கவிதை.



படிப்பகம்

www.padippakam.com

# சோதியா.....

சோதியா நீ
எம் விடியலின் சோதியாய்!
விடியலின் வீர விருட்சமான
உன் விழுதுகள் எல்லாம்
இங்கே வித்துக்களை
விதைத்து, விதைத்து
வீறுடன்,
விரைவுடன்,
விவேகத்துடன்,
வளர்ந்து, வளர்ந்து.........
வீரத்தை வெகுவிரைவில்
வெளிச்சத்திற்கு கொண்டு வருவார்கள்.
அப்போதும் - சோதியா
நீ எம் விடியலின் சோதியாய் !



படிப்பகம்

www.padippakam.com

சோதியா - உன்
இதயம் இயங்க முடியாமல்
இயற்கை மரணம்
உன்னுடன் இணைந்ததா
உன் இயக்கத்தை எல்லாம்
இறைத்து, இறைத்து
எம்மை இயங்கவைத்த
உன் இயக்கத்திற்கு,
இதயம் இயங்க மறுத்த
இன்னல் எம்மை
இம்சிக்கிறது சகோதரியே !

எம் ஆரோக்கியத்தில்
அன்னையாய்
ஆலோசனை கூறி
அணு அணுவாய் எம்மை
அவதானித்த உன் ஆரோக்கியத்தை
நாம் ஆராயத்தவறி விட்டோம்.

சோதியா - உன்
சிரித்த முகத்தின் பின்னால்
இத்தனை சித்திரவதைக்குள்
உன் இதயம் இருக்கும் என
எப்படி........ எப்படி......
எம்மால் சிந்தித்திருக்க முடியும்?
ஓ....! சோதியா நீ
எம் விடியலின் சோதியாய்!

மகளிர் படைப்பிரிவின்
முன்னேற்றத்தின்
மூலவேர் நீ!



படிப்பகம்

www.padippakam.com

எம் தன்னம்பிக்கையை
தைரியப்படுத்திய
முதல் தலைவி நீ.

அண்ணனின் ஆணைக்கு
செயல்வடிவம் கொடுத்த
தன்னிகரில்லா தங்கை நீ.

உன் இயற்கை மரணத்திலும் கூட
இலட்சியத்தை பொறித்த
வீரப் பெண்புலி நீ.
சோதியா - நீ
எம் விடியலின் சோதியாய்!

கவிதையை
ரசிக்கும் காரிகையே
ஓர் வீரமரணத்தில்
நீ கதாநாயகியாக
என் பேனா கவி எழுதும்
காலம் கனியும் என்று
கருதவே இல்லையே!

சோதியா,
என் பேனாவின்
கண்ணீரை காணிக்கையாக்கி
காலமெலாம் எமை
வழி நடத்தென
உன் ஆத்மாவிடம்
அந்தரங்கமாக யாசிக்கிறோம்!

உன்
இதயம் சுமந்த இரகசியத்தை
இறந்தபின்தான் - எம்மால்
புரிந்துகொள்ள முடிந்ததை
எண்ணி எண்ணி நாம்



படிப்பகம்

www.padippakam.com

மீண்டும் மீண்டும்
உன் உறுதியின் உறைவிடத்தில்
மண்டியிட்டு - மானசீகமாக
மன்னிப்பு கோருகிறோம்.
சோதியா நீ
எம் விடியலின் சோதியாய்!

சோதியா நீ
உயரமானவள்
ஆம் மிக.... மிக.... உயரமானவள்
உள்ளத்தாலும்!

சோதியா - உன்
நிறம் வெள்ளை
ஆம் மிக..... மிக..... வெள்ளை
இதயத்தாலும்!

சோதியா நீ
சோதியேதான்
பெயரில் மட்டுமல்ல
எம் விடியலிலும்

சோதியாய் பாதைகாட்டும்
உன் வீரமரணம்!
எம் பயணம் தொடரும்!
தன்னம்பிக்கையின் தைரியத்தால்
தமிழீழத்தில்
பெண்களின் அடிமை விலங்கு
பொடிப் பொடியாகும்!!
உன் தூய நினைவுகள்
எம் துடிப்பினை
துரிதப்படுத்தும்!!!

(விடுதலைப் புலிகள் மகளிர் படைப்பிரிவின் முதலாவது பொறுப்பாளர் மேஜர் சோதியா நினைவாக எழுதப்பட்டது)



படிப்பகம்

www.padippakam.com

# அனித்தா நீ ஓர்....

என் - இனிய தோழியே
அம்மா அனித்தா
உன்னை நான்
கண்டதில்லை
கண்களால் மட்டும்.

ஆனால்
நீ விட்டுச் சென்ற
உணர்வுகளால்
உன்னைக் கண்டதுண்டு
என் உள்ளத்தில்
உன் குரலை நான்
கேட்டதில்லை



படிப்பகம்

www.padippakam.com

என் செவிகளால் மட்டும்.
ஆனால்
நீ சொல்லிச் சென்ற
உண்மைகள் - இன்றும்
எதிரொலிக்கின்றது.

என் இதயத்தினுள்ளே
உன்னுடன்
நான் இருந்ததில்லை
நீ உயிருடன் உலவியபோது மட்டும்.

ஆனால், இன்று
என்னுடன் நீ இருக்கிறாய்
உன் நினைவுகளின்
நிழலாக!

அனித்தா
நீ சொல்லாமல்
சொல்லிச் சென்ற
முன்னுதாரணத்தால் - நாம்
முன் தள்ளப்படுகின்றோம்!

சின்ன வயதில்,
சிரித்த உன் முகத்தின் பின்னால்
ஓ!.... எத்தனை... சிந்தனைகள்
உன் சிந்தனைகளின்
சிறகடிப்பால் - நீ
தேர்ந்தெடுத்த பாதையில்
பொறித்துச் சென்ற
பொன்னெழுத்துக்களால்
மிக.... மிக....



படிப்பகம்

பெருமைப்பட்டுக் கொள்கிறோம்
நாங்களும் பெண்கள் என்பதால்!

கேவலப்படுத்தியவர்களை எல்லாம்
கேள்விக்குறி போல
குனியவைத்து,
விமர்சித்தவர்களையெல்லாம்
வினாவாக்கி வியக்கவைத்து
பெண்களின் பெருமைக்கு
மெருகேற்றியவளே,

உன்
துணிச்சலின் துள்ளலால்
தூங்கியவர்களெல்லாம்
துயிலெழும்பி விட்டார்களம்மா!

தளபதி குமரப்பாவால்
களம் காட்டப்பட்ட நீ
அதே உறுதியுடன்,
அதே விசுவாசத்துடன்
அதே இலட்சிய வேட்கையுடன்
அந்த மாவீரனின் வழியினிலேயே
சயனைற் அருந்தி
மரணத்தை மணந்து,
அந்த உத்தம சீலனுக்கு
உயர்ந்த.... மிக உயர்ந்த
அஞ்சலி செலுத்திய
உன் உண்மை உள்ளத்தை
நினைக்கும் போதெல்லாம்
எம் உணர்வுகள்
புல்லரிக்கிறது தோழி!

www.padippakam.com

கல்வியில் நீ
புயலாக இருந்தும்
புலிகளை நீ
பூஜித்ததால்
பள்ளிப்படிப்பை
தூக்கி எறிந்துவிட்டு,
துப்பாக்கி தூக்கிய - உன்
துடினத்தின் துடிப்புக்கள்
இன்றும் எம் இதயத்துள்
அடித்துக்கொள்கிறது அனித்தா
சகோதரி,
உன் தீராத ஆசை - அது
இறுதிவரை தீராமலேயே
நீ தீயுடன் சங்கமித்ததை
நினைக்கும் போது......
அது தான்
அண்ணாவை சந்திக்க வேண்டுமென்பது
அந்த
சந்திப்பை நீ
சந்திக்கும் முன்னர்
சாவு உன்னை சந்தித்த
சங்கடத்தை எம்மால்
சகிக்கவே முடியவில்லையம்மா

உன் சைக்கிள்
சில்லுகள்
மட்டக்களப்பையும்,
அம்பாறையையும்,
ஆரையம்பதியையும்
அணுஅணுவாக ஆராய்ந்து
எத்தனை.... எத்தனை....
சாதனைகளை
சாதித்து முடித்தன!



படிப்பகம்

www.padippakam.com

மரணத்தை நீ
எந்த நிமிடத்திலும்
சந்திக்க தயாராக இருந்ததால்
தயக்கமற்ற உன்
துணிச்சலின் சாதுரியத்தால்
நாம் சந்தித்த அந்த வெற்றிகள்.

சாவு உன்
சரித்திரத்துடன்
சந்தித்துக் கொண்ட
அந்தக் கறுப்பு நாளின்
கடைசி நிமிடத்திலும் கூட,
உன் அபிமானத்தின்
அடையாளத்தை நீ
அறிமுகப்படுத்திவிட்டுத்தான்
அணைந்து போனாய் என்பதை
அறியும் போது
நண்பியே
கடமையின் கட்டளையை
காற்றோடும் கதைத்து
நீ தூது சொன்னதை
புரிந்து கொண்டோம்!
இதோ,
புறப்பட்டுவிட்டோம்!!

இந்திய ஆக்கிரமிப்புக் காலகட்டத்தில் மட்டக்களப்பு பிராந் தியத்தில் ஒரு மறை போராளியாக இயங்கினாள் லெப். அனித்தா (சித்திராதேவி தம்பிராஜா, ஆரையம்பதி, பிறப்பு:- 10-09-1970)
இந்திய இராணுவத்தின் அடிவருடிகளாக இருந்து செயற் பட்ட E. P. R. L. F. கும்பலினால் களுவாஞ்சிக்குடியில் 28-11-1988 அன்று கைதுசெய்யப்பட்டபோது சயனைட் அருந்தி வீரமரணமடைந்தார்.



படிப்பகம்

# புறப்பட்டுவா....

ஆணாதிக்கப் புயலால்
அடுப்படியில்
அகதியாகி
தீயோடு
மௌனயுத்தம் நடத்துபவளே!
புறப்பட்டு வா.

தன்னம்பிக்கையை மட்டும்
தைரியத்துடன்
வளர்த்துக்கொள்
உன் விருப்பங்களை
உன் சிந்தனைகளை
சுயமாகச் செயற்படுத்த
சுதந்திரம் கிடைக்கின்றதா?

இல்வாழ்க்கை - இன்று
இல்லாதவர்களுக்கு
இல்லையாம்.
இருபதாம் நூற்றாண்டு
இன்னமும் இதைத்தான்
இயற்றிக்கொண்டிருக்கிறது!

ஊமைகண்ட கனவுபோல
உன் உள்ளத்து உணர்வுகளும்
ஊமையாகும்போது,
உன்னைக் குட்டுபவர்கள்
குட்டக்குட்ட
நீயும் குனிந்து குனிந்து
அங்கே

www.padippakam.com

குசினிக்குள்ளேயே
குமுறிக்கொண்டிருப்பாய்
புறப்பட்டு வா
ஒரு புதுயுகம் படைப்போம்
நாம் தூக்கிய
துப்பாக்கியின் பின்னால்

எம் இதயம் நேசிக்கும்
தேசத்து விடுதலை
எமக்கெட்டும் போது
அங்கே
பெண்ணடிமைக்கு
சமாதி கட்டப்படும்:
சமுதாயத்தின்
பிற்போக்கு சிந்தனைகளுக்கு
புதைகுழி தோண்டப்படும்.

நாளைய
இந்த எழுச்சிக்காக
இன்று நீ எழுந்து வா
அதோபார்.......
உன்னை நோக்கி
துப்பாக்கியை நீட்டியபடி,
இரத்தவெள்ளத்தில்
உன் உடன்பிறப்பு
பிடித்துக்கொள்
அவள் ஆயுதத்தை!
பின்பற்று
அவள் சுவடுகளை!!

(சுதந்திரப் பறவைகள் 15-12-1989, பறவை 12)



படிப்பகம்

# தமிழீழப் பெண்ணிவள்!

இவள் நெற்றிதனை அலங்கரிப்பது
குங்குமம் அல்ல செங்குருதி!
இவள் கண்களில் தெரிவதெல்லாம்
இளமையின் இனிமைகள் அல்ல
இறந்தவர்களின் கல்லறைகள்!
இவள் உதடுகள் உச்சரிப்பது
உபயோகமற்ற உளறல்களையல்ல
உதிர்ந்தவர்களின் உறுதிமொழிகளை!
இவள் கழுத்தில் கிடப்பது
தாலியல்ல சயனைற்குப்பி!
இவள் அணைத்துக் கொள்வது
ஆண்களையல்ல ஆயுதத்தை!
இவள் கால்கள் தேடிப்போவது
உறவினரின் உறவைத்தேடியல்ல,
தமிழீழ மண்ணின் விடுதலையை நோக்கி
இவள் துப்பாக்கி
தீர்க்கும் வேட்டுக்கள்
தப்பாது எதிரியை வீழ்த்தும்!
தமிழீழ விலங்கை ஒடிக்கும்!!
அப்போது எம்மக்களின் உதடுகள்
தேசிய கீதத்தை இசைக்கும்!!!

www.padippakam.com

# இவள்...

வித்தியாசமானவள்
வீரத்திற்கு
விளக்கங்கொடுக்கும் தகுதி
இவளுக்குண்டு.
இவள் கால்கள்
களத்திலே களைப்பின்றி
கனதூரம் நடந்ததுண்டு
அதனால்
வீரத்திற்கு
இவளால்
விளக்கங்கொடுக்கமுடியும்!

இவளது
ஒவ்வொரு செயலிலும்
உயிர்ப்பிருக்கும்!
காரணம்
ஒவ்வொரு அசைவிலும்
கடமையின் உதைப்பிருக்கும்.

இவள்
ஒழுக்கத்திற்கு
விரிவுரை நிகழ்த்துபவள்!
இவளால்
வளர்க்கப்பட்டவர்கள் இன்று
இவளைப் போன்றோரை
வளர்த்துக் கொண்டிருக்கிறார்கள்.



படிப்பகம்

www.padippakam.com

நீதியின் பக்கம்
நிமிர்ந்து நிற்பவள்
உடன் பிறந்தவனாயிருந்தும்
உண்மைக்காக
ஊர்வலம் நடந்த போது
உடனிருந்து
உடன்பட்டவள்!

தற்பெருமையற்றவள்
தன்நிலையில்
மிக...... உயர்ந்திருந்தும்
எல்லோர் நினைவிலும்
இன்று வரை
நிலைத்திருப்பவள்.

இவள்
சோதனைகளைச் சந்தித்து
சாதனை படைத்தவள்!
சோகத்தின்
சொந்தக்காரியாய் இருந்தும்
சாகும் போது சாவை
சந்தோசமாய் அணைத்துக்கொண்டவள்!

இலட்சியப்பசி
இவளுக்கிருந்ததால்
அஜீரணிக்க முடியாத
கசப்பான.......
உண(ர்)வுகளைக் கூட
ஜீரணிக்க
பழகிக் கொண்டவள்!



படிப்பகம்

www.padippakam.com

ஆவேசமான,
அப்பழுக்கற்ற,
உறுதியான,
கொள்கையின் அத்திவாரமே
அண்ணனின் அன்புதானே!
சிறந்த
போராளிகளை
உருவாக்கும்
ஒரு பேராசிரியரை
எமது இயக்கம் இழந்தது!

ஓர் போராளியின் உயரிய
உன்னத பணியை
இந்த மண் இழந்தது!!
ஓர் இனிய தோழியின்
புனித அன்பை
எமது இதயம் இழந்தது!

அஜி.......
இன்று
உறுதியின் உறைவிடத்தில்
உனது முகவரியும்!
மாவீரர் மண்டபத்துள்
உன் படத்திலும் மாலை!
நீ பிறந்த மண்ணில்
உன் பெயர் சொல்லும் வீதிகள்!
நீ பிடித்த ஆயுதம்
நீ வளர்த்த தோழியிடம்!



படிப்பகம்

www.padippakam.com

நீ விட்ட
இடம் தொடர
உன் சீருடையில் நாங்கள்!
ஆனால்.......
நீ தொட்ட
என் இதயம் மட்டும்
இன்றும்
வெறுமையாய்.......!

**கப்டன் அஜித்தா** [சுகுணராணி கந்தையா. வரதன் இல்லம், அரசடிவீதி, சங்கத்தானை. பிறப்பு:-22-05-1968 22-12-1990 அன்று பலாலி இராணுவத்தின் மினிமுகாம் ஒன்றின் மீது நடாத்தப்பட்ட தாக்குதலில் வீரமரணமடைந்திருந்தார். )



படிப்பகம்

www.padippakam.com

# உறுதியின் உறைவிடத்தில்...

உங்கள் கால்கள் தேடிய
'எல்லையை' அடையும்வரை
உங்கள் கரங்கள் ஏந்திய
துப்பாக்கி பார்த்த 'குறி'யை நோக்கி
உங்கள் இதயம் சுமந்த
'இலட்சிய தாகத்தை' சுமந்து
உங்கள் உதடுகள் சொல்லத் துடித்த
'தேசிய கீதத்தை' சொல்வதற்காய்,
நீங்கள் சுவாசிக்க நினைத்த
'சுதந்திரக் காற்றை' தேடிக்கொண்டு
உங்கள் கண்கள் கண்ட
'கனவு'களை நனவாக்க
உங்கள் காதுகள் கேட்ட
அதே, அதே...... 'கட்டளை'யின் கீழ்
நாங்களும் உங்களை நோக்கித்தான்!
உங்கள் ஆத்ம சாந்திக்காய்
நாங்கள் சமர்ப்பிக்கத் துடிப்பது
'வீரவணக்கங்களை' மட்டுமல்ல
தமிழீழத்தின்
'விடுதலை'யையும் சேர்த்துத்தான்.



படிப்பகம்

www.padippakam.com

# பாரதமே மனம்விட்டு உன்னுடன்.....

பாரதமே!
நீயும் ஓர்
ப்ரூட்டஸ் ஆகிப்போனதை
நம்பத்தான் முடியவில்லை!

நேருவின் பேரனே
நேர்மைக்கு மாறாக
போர் தொடுப்பான் என
எம்மால்
நம்பத்தான் முடியவில்லை!

எங்கள் மண்ணை நீங்கள்
சிவப்பாக்கியதால்
உங்கள்
வரலாறு கடக்கப்போவது
கறுப்பு ஒற்றைகளை மட்டுமல்ல,
அழியாத
அவமானத்தையும் சேர்த்துத்தானென்று
எண்ணும் போது
உங்களிற்காக
நாங்களும் பரிதாபப் படுகின்றோம்.
ஏனெனில்
பக்கத்து நாடு என்ற
பச்சாதாபத்தினால்!



படிப்பகம்

www.padippakam.com

உங்கள்
ஆதிக்கக் கரங்களை
நீங்கள் அகலமாக்கிய போது
அகப்பட்டுக் கொண்டது
எங்கள்
சுதந்திர தாகமும்
விடுதலை வேட்கையும் தானா?

அரசியல் சதுரங்கத்தில் - இன்று
உங்கள் ராணியை மட்டுமா
கோட்டை விட்டீர்கள்?

ராஜாவும்
நகர முடியாது
'அவுட்'டாகிப் போனாரே

உங்கள்
வரலாறுகள் சொன்ன
வீரத்தையும், 'உண்மையையும்,
நேர்மையையும்
பக்கத்து நாட்டினது
என்ற பாசத்துடன்
கற்றுக்கொண்டதால்
கடைப்பிடித்ததால்
அன்று அங்கே பறந்த
புலிக்கொடி இன்று
இங்கே பறக்கிறது!



படிப்பகம்

www.padippakam.com

நீங்களோ
அந்த அரிய பொக்கிசங்களை
பூட்டி வைத்து,
கறையான் புற்றெடுக்க விட்டு
போட்டியிலும்,
பொறாமையிலும்,
ஆட்சியிலும்,
அதிகார மாட்சியிலும்
ஆசை வைத்து
சூழ்ச்சிவலை பின்னினீர்கள்!
இன்று
மாட்டிக் கொண்டீர்களே!
அந்த மகான்களின் மகிமைகளை
மறந்து போய்விட்டீரே!

உங்கள் காந்தியை
நாம் கற்றுக்கொண்டதால்
அந்த
காந்தியை முந்திவிட்ட
எங்கள் திலீபனை
உலகம் சந்தித்த சரித்திரம்
எம் உண்மைக்கு
ஓர் உதாரணம்
உங்களது
துரோகத்தனத்தால்
நாம் துன்பப்பட்டதுண்டு!
ஆனால்
துவேசம் எம்மிடம்
துளியளவும் இருந்ததில்லை!



படிப்பகம்

www.padippakam.com

பாசக் கரங்களால்தான்
பாரதத்தை நாமணைத்தோம்!
தமிழ் நாட்டின்
செல்லப்பிள்ளைதான்
'தமிழீழம்' என்று எண்ணி
இறுமாந்தோம்!
ஆனால்.......
உங்கள் அணைப்பின் பின்னால்
ஓ.... ஓ.... இத்தனை
அர்த்தங்களா?
எங்களது
உணர்வுகளைப் பதம் பார்த்தது
உங்களது
ஆயுதங்கள் மட்டுந்தானா?
இல்லையே.
உங்களது
எழுத்துலக மேதைகளும்
கொச்சைப்படுத்தினார்கள் - அது
கொஞ்சமா?.... அப்பப்பா....
எத்தனை கேவலங்கள்
அத்தனையும்
நாம் பொறுத்து
ஆயுதத்தால் பதில் கொடுத்து
மிச்சமுள்ள - உங்களது
அந்தப் பேனாவின் காதலர்க்கு
எச்சரிக்கை
கொடுக்கின்றோம்
எம்மையும் பேனா எடுத்தெழுதும்!!



படிப்பகம்

www.padippakam.com

வீரத்தால்
எங்கள் விலங்குடைத்து
வல்லரசின் வாலொட்ட நறுக்கியும்
நாம் வீறாப்பு கொள்ளவில்லை!
ஆயுதத்தை நாங்கள்
அவசியத்தால் தானேற்றோம்!
ஆயுதமே எங்கள்
அன்றாட தேவையல்ல!
பாரதமே, நீயோ
அதையே தான் நம்புகிறாய்
அதனால் தான் - நீ
போவதற்கு முன்னாலும்
எமக்கு பொறி வைத்துப் போகின்றாய்
நீ போய் முடிந்த
பின்னிங்கே, போர் முடியும்!
ஓர் நாடேழுந்து - உனக்கு
அழைப்பனுப்பும்
செங்கம்பள விரிப்பில் - உனக்கு
வரவேற்புகள் நடக்கும்!!
அப்போது - உன்
மனச்சாட்சி மட்டும்
மௌனமாக கண்ணீர்விட்டு
மன்னிப்பு கோரும்.



படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

எலும்புகளும் மண்டையோடுகளும்
இடறும் போது,
இதயத்தை இரும்பாக்கிக் கொண்டு
துப்பாக்கித் தடுப்பால் கரைதேடியவர்கள்
உறுதிக்கும் உவமானமாகும்
உண்மையின் உடன்பிறப்புக்கள்!
எம் விடுதலைத் தீயை
உலகெங்கும் கொழுந்துவிட்டெரியச் செய்யும் கொள்கையின்
தீப்பிளம்புகள்!
உறங்கிக் கிடந்தவர்களைத்
தட்டியெழுப்பிய உதய சூரியன்கள்!
போராளிகளைப் படைத்துக் கொண்டிருக்கும்
புதிய சிருஷ்டிகர்த்தாக்கள்!
எதிரியை நோக்கி எடுத்துவைக்கும்
ஒவ்வோர் அடியையும் துரிதப்படுத்தி
முன்னேற வைக்கும் வீரத்திற்கு
விரிவுரை நிகழ்த்திடும் விரிவுரையாளர்கள்!
தமிழீழத்தில் புலரும் பொழுதுக்கு
ஒளி கொடுக்கப் போகும்
சூரியக் கதிர்கள்!
இவர்கள் இல்லாமல் போனவர்கள் அல்ல
எம்முள் எல்லாமாய் இருப்பவர்கள்.



படிப்பகம்

www.padippakam.com

# விருதுகளின் பெறுமதி....

அங்கும் இங்குமாய்
குவிந்து புகைந்தபடியே
சாம்பல் மேடுகள்.....
உடைபட்ட இடிபாடுகள்
உருக்குலைந்த பிணமலைகள்.......
வீதிகள் எங்கணும்
அன்னியக் காலடிகள்......
இவற்றிற் கிடையே,
உருமறைப்புக்கள் மத்தியில்
குறிபார்த்தபடி வேங்கைகள்.....
பீரங்கிகள், கவசவாகனங்கள்
எல்லாமே பொடிப்பொடியாக.....
ஆயுதபலமும், ஆட்பலமும்
மண்டியிட்டபடி பின்வாங்க......
"வீரமரணங்கள்" பெற்றுத் தந்த
விருதுகளின் பெறுமதியே
"தமிழீழ" விடுதலை!!



படிப்பகம்

www.padippakam.com

# கிறிஸ்மஸ் வாழ்த்துக்கள்!

பிரியமுள்ள தோழி
வானக விடியலில்
சோதியாவுடன் இருக்கும்
உங்கள் அனைவருக்கும்
எம் புரட்சிகர
கிறிஸ்மஸ் வாழ்த்துக்கள்!
கடந்த கிறிஸ்மஸ்
அந்த
"கானக விடியலில்"

ஓ..............
அன்று
நாம்
எல்லோரும்
ஒன்றாக
எம்
அண்ணனை
சூழ
அன்னியனை
விரட்டிய
அந்த
சந்தோச
நினைவுகளுடன்
இறந்து போன
அந்த
இனிய நாட்களை
எண்ணிப்பார்க்கையில். . . .



படிப்பகம்

இன்று
வானக விடியலில்
நீங்கள்
எத்தனை பேர்.......
கிறிஸ்மஸ்
வாழ்த்தை
உங்களுக்கு
நேரில்
தெரிவிக்க
அவசர அவசரமாக
அஜியும்
ஆஷாவும்
சுந்தரியும் கூட
உங்களுடன்
இனியவளே
களத்திலே
நாம் வைத்த
"கிறிஸ்மஸ் றீ"யோ
கண்ணீரிலும்
செந்நீரிலும்
வான்நோக்கி
வளர்கிறது
உங்களிற்கு
வாழ்த்துக் கூற போலும்!
கிறிஸ்மஸ்
பாப்பாவோ
தன்
வயிறு நிரம்ப
வெடி பொருளை
சுமந்து கொண்டு



படிப்பகம்

www.padippakam.com

"கரும்புலியாக"
அவனது
அரண் நோக்கி
போகிறது.
உங்களிற்கு
"கிறிஸ்மஸ்"
"பரிசு" தரபோலும்!

நீங்கள்
பெற்றுத் தந்த
பெறுமதி மிக்க
வெற்றிகளால்
பெருமிதம்
கொண்ட
மக்கள்
சந்தோசத்துடன்
நீட்டிய
கண்டோஸ்
கட்டுப்படுத்திய
கண்ணீரின்
உவர்ப்பால்
கரகரக்கிறது தோழி
பட்டாசுகள்
வெடிப்பதற்கு பதில்
இங்கே
எம்
துப்பாக்கிகள்
சப்திக்கிறது.



படிப்பகம்

www.padippakam.com

சீற்றத்துடன்
சீறும்
சன்னங்கள்
உங்கள்
பெயர் சொல்லியே
அவனை
சீண்டும்
தோழி
எத்தனை
சுமைகள்
சுமந்தும்
உன்னைப் பிரிந்ததால்
வலிக்கும்
இதயத்தையும்
கனக்கும் கண்களையும்
சுமக்க முடியவில்லை.
தோழி
சுமக்கவே முடியவில்லை.
"தமிழீழ விடியலில்"
அடுத்த
கிறிஸ்மஸ்
கரோலில்
என்னிடம் நீ
அன்றேல்
உன்னுடன்
நான்.



படிப்பகம்

# எனது பேனா....!

எனது
பேனா கூரானது
எனது
கைகளில் உள்ள
துப்பாக்கியைப் போல

ஆனால்
துப்பாக்கி
சன்னத்தை மட்டுமேதுப்பும்
என் பேனாவோ
சகலதையுமே கக்கும்!

எந்தப் போட்டிகளிலும்
கலந்து கொள்ள - எனது
கவிதைக்கு அனுமதியில்லை
ஆனால்
எமது உணர்வுகளை
அவமரியாதை செய்து
அனுமதிவழங்கத்
தவறும் இடங்களில்
எனது பேனா
உத்தரவின்றி
உட்பிரவேசிக்கும்!



படிப்பகம்

www.padippakam.com

பாராட்டுக்களோ
அன்றி பரிசுகளோ
என் கவிதையை
பரவசப்படுத்துவதில்லை
ஏனெனில்!
மிக உயர்ந்த பரிசும்,
மிக..... மிக...... உயர்ந்த
பாராட்டும் அன்று
என் கவிதைக்கு
கிடைத்ததால்தான்
இன்று - என்கவிதை
பரிசுத்தமாய் இருக்கிறது.

எனது
பேனா கூரானது!
எனது
கைகளில் உள்ள
துப்பாக்கியைப் போல!!

எந்த
கலாநிதியுடனும்
எந்த
வித்துவானுடனும்
எந்த
பண்டிதருடனும்
என் கவிதை சவால் விடும்
ஏனெனில்
எனது பேனாவில்
உணர்வுகள்
உயிருள்ளவை!



படிப்பகம்

www.padippakam.com

எமது
உணர்வுகளை
கொச்சைப்படுத்தும்
சில பேனாக்களுக்கு
ஓர் வேண்டுகோள்!
முகவரி தாருங்கள்
உங்கள் முகத்திரையை
என் பேனா கிழிக்கும்!

எனது பேனா
கூரானது!
எனது கைகளிலுள்ள
துப்பாக்கியைப் போல!
எனது துப்பாக்கி
எதிரியை மட்டுமே
குறிபார்க்கும்.
எனது பேனாவோ
எல்லாவற்றையும்
பதம்பார்க்கும்!

எனது
பேனாவின்
நினைவுகளின்
இறந்தகாலம்
நிகழ்வுகளின் நிகழ்காலம்,

எனது
பேனாவின்
நினைவுகளின்
நிகழ்காலம்
நிகழ்வுகளின் எதிர்காலம்



படிப்பகம்

www.padippakam.com

புரியவில்லையா
என் கவிதைகளை
நீ புரியவில்லை!

இது
எனக்குக் கிடைத்த
வெற்றியல்ல!
எனது
கவிதைக்குக் கிடைத்த
வெற்றியுமில்லை!
எனது
பேனாவின் வெற்றிகள்
எனது கைகள்
நாளை ஓயலாம்
அன்றி....... ஒடியலாம்
ஆனால்
எனது பேனாவோ
ஓயப்போவதில்லை
எமது துப்பாக்கியைப் போல!!!
மன்னார் அனுபவத்தின் பின்
எனது பேனா கூரானது
கைகளிலுள்ள
துப்பாக்கியையும் விட
எனது பேனா கூரானது.

"விடுதலைப் புலிகள்" குரல் 25 இல் வெளிவந்தது. இந்திய -புலிகள் போரின்போது மணலாற்றுக்காட்டில் தங்கி யிருந்த கப்டன் வானதியின் கவிதை எழுதும் ஆற்றலுக்காக தலைவர் அவர்கள் ஒரு பேனா ஒன்றை வானதிக்கு அன்ப ளிப்புச் செய்திருந்தார்.
அந்தப் பேனாதான் "எனது பேனா"வின் கருவாகும்.



படிப்பகம்

www.padippakam.com

# எழுதாத கவிதை..

எழுதுங்களேன்
நான்
எழுதாது செல்லும்
என் கவிதையை
எழுதுங்களேன் !

ஏராளம்.......
ஏராளம்.... எண்ணங்களை
எழுத
எழுந்துவர முடியவில்லை,
எல்லையில்
என் துப்பாக்கி
எழுந்து நிற்பதால்.
எழுந்துவர என்னால் முடியவில்லை!
எனவே
எழுதாத என் கவிதையை
எழுதுங்களேன்!

சீறும்
துப்பாக்கியின் பின்னால்
என் உடல்
சின்னா பின்னப்பட்டு போகலாம்
ஆனால்
என் உணர்வுகள் சிதையாது
உங்களை சிந்திக்க வைக்கும்.



படிப்பகம்

www.padippakam.com

அப்போது
எழுதாத என் கவிதையை
எழுதுங்களேன்!

மீட்கப்பட்ட - எம் மண்ணில்
எங்கள்
கல்லறைகள்
கட்டப்பட்டால்
அவை
உங்கள்
கண்ணீர் அஞ்சலிக்காகவோ
அன்றேல் மலர் வளைய
மரியாதைக்காகவோ அல்ல!
எம் மண்ணின்
மறுவாழ்விற்கு
உங்கள் மன உறுதி
மகுடம் சூட்ட வேண்டும்
என்பதற்காகவே.

எனவே
எழுதாத என் கவிதையை
எழுதுங்களேன்!

அர்த்தமுள்ள
என் மரணத்தின் பின்
அங்கீகரிக்கப்பட்ட
தமிழீழத்தில்
நிச்சயம் நீங்கள்
உலாவருவீர்கள்!



படிப்பகம்

www.padippakam.com

அப்போ
எழுதாத
என் கவிதை
உங்கள் முன்
எழுந்து நிற்கும்!

என்னை
தெரிந்தவர்கள்
புரிந்தவர்கள்
அரவணைத்தவர்கள்
அன்பு காட்டியவர்கள்
அத்தனை பேரும்
எழுதாது
எழுந்து நிற்கும்
என்
கவிதைக்குள்
பாருங்கள்!

அங்கே
நான் மட்டுமல்ல
என்னுடன்
அத்தனை
மாவீரர்களும்
சந்தோஷமாய்
உங்களைப் பார்த்து
புன்னகை பூப்போம்!

(ஆனையிறவு முகாம் தாக்குதலில் 15-07-1991 இல் வீரமரணமடைந்த கப்டன் வானதி [பத்மசோதி சண்முகநாதபிள்ளை] எழுதிய இறுதிக் கவிதை இது.)
21-07-1991 அன்றைய ஈழநாதம் நாளிதழில் இக்கவிதை பிரசுரிக்கப்பட்டிருந்தது.



படிப்பகம்

www.padippakam.com

# மன்னார் மீளும்!
# உன் கனவுகள் வாழும்!!

இதுவரை....
சக போராளிகளின்
நட்புக்குப் பின்னால்
பிரிவு வந்து வருத்திய துண்டு!
ஆனால்
டாம்போ உன்
பிரிவுக்கு பின்னர் தான்
நட்பே வந்தது!

உன்னை
இடையில் இழந்த போது
இதயம் விசும்பியது நிஜந்தான்
ஆனால்
அதன் பின்தான் புரிந்தது
இடையில் நீ பிரிந்திருந்ததால்
எம்முள் - ஓர்
இமயமே எழும்பியதென்பது!



படிப்பகம்

www.padippakam.com

எத்தனை
உயர்ந்த நினைவுகள்
இடையில்
கவிழ்க்கப்பட்டு விட்டதே
அநியாயமாய்
ஓர் கரும்புலியை
இழந்துவிட்டோமே
என
அங்கலாய்ப்பவர்களுக்கு
ஓர் அறிவுரை!

இவன் மரணத்தை
அர்த்தமற்றது என
அலட்டிக்கொள்வதுதான்
அர்த்தமற்றது!

ஏனெனில்
அதன் பின்
நாம் கண்ட
வெற்றிகளின் மறுவடிவம்
இவனிலும்
இவனுடன்-
இறந்தவர்களிலும்தானே உள்ளது.
எதிரியால்
உன் தியாகம் பயணப்பட்ட
வெறும் வண்டியை மட்டும்
குறிபார்க்க
முடிந்ததென்னவோ
உண்மைதான்!



படிப்பகம்

ஆனால் இடையில்
உன்னிடம் விடை பெற்று
இறங்கிக்கொண்ட
உன் தியாகத்தை
குறிபார்க்க
எதிரியால் முடியுமா என்ன?

இன்று களத்தில் மட்டுமல்ல
உளத்திலுங் கூட
ஒளியூட்டி
வழிகாட்டிக் கொண்டிருப்பது
உனது தியாகந்தானென்பதை
எதிரியால் புரிந்துகொள்ளவா முடியும்?
உன் முகத்தின் பின்
எழுபத்தியெட்டு மாவீரர்களின்
படம் பொறித்த
அந்த நினைவாலயத்துள்
வைக்கப்பட்ட
கனமான.... காவியம்,
மூச்சுத் திணற வைத்தது
ஸ்ரீலங்காவின்
முப்படைகளை மட்டுமல்ல,
விலை பேசலாமென வலை வீச எண்ணிய
வல்லரசுப் போர்வைக்குள்ளிருக்கும்
வல்லூறுகளையும்தான்;
என எண்ணுகையில்
ஓ.........
குறிபார்த்து விழுந்த
அடிகளல்லவா இவைகள்!

www.padippakam.com

கானகத்தை, காற்றை,
கடலலையை, குளிர் நிலவை,
பனங்கூடல்களை,
இன்னும்..... இன்னும்
வெட்டைகளை,
பசும் புற் பற்றைகளை
அருவிகளின் சலசலப்பை
தனித்திருந்து
ரசிக்க முடிந்த என்னால்,
இப்போ
எங்கும், எதிலும்,
அந்த வண்டிச் சத்தத்தையும்
அதன் பின்
தியாகம் உன்னைவிட்டு
விடைபெறும் போது ஏற்பட்ட
அந்த வெளிச்சத்தையும்
ஓசையையுமே
பார்க்க,
கேட்க முடிகிறது!

நண்ப........
பொறுத்துக்கொள்
என் வரையில்
பொறுப்பெடுத்து விட்டேன்!
காவலரணில்
கடமையில் இருக்கும் போது
எதிரியின் பாசறையை
முற்றுகையிடும் போது,



படிப்பகம்

www.padippakam.com

அடுத்த பாய்ச்சலுக்காய்
துப்பாக்கியைத் துடைக்கும் போது,
ஒவ்வொரு ரவையாக
எண்ணி....... எண்ணி
எண்ணியெண்ணி
நிரப்பும் போது,
உன்னுடன் பேசுகிறேன் டாம்போ....
மீட்கப்படப் போவது
வெறும்
சிலாபத்துறை மட்டுமல்ல
என்பதை மட்டும்
இப்போது தெரியப்படுத்துகிறேன்!

நான்
சந்தித்த நிஜங்களிற்கு
நிறந்தீட்டிய போது
டாம்போ........
உன் கனவுகளை
ஏந்த
கரங்கள் தேவையென
புரிந்தது!

என்
நட்புக் கரங்களால்
ஏந்தப்பட்ட
உன் கனவுகள்
கடமையை கூறுவதால்



படிப்பகம்

www.padippakam.com

மீண்டும்..... மீண்டும் சொல்கிறேன்
நண்ப....
எம்கைகள் ஓயும்வரை
எமது துப்பாக்கி சீறும்!
முடிவில்...
மன்னார் மீழும்!
அதில்
உன் கனவுகள் வாழும்!

மன்னார், சிலாவத்துறை இராணுவமுகாம் மீது நடாத்தப் பட்ட தாக்குதலில் கரும்புலியாகச் சென்ற மேஜர் டாம்போ வின் (கா. தயாபரன், முழங்காவில்) நினைவாக இக்கவிதை எழுதப்பட்டது.

இம் முகாம் தாக்குதலில் கப்டன் வானதியும் முக்கிய பங்கெடுத்துக்கொண்டார் என்பது குறிப்பிடத்தக்கது.



படிப்பகம்

www.padippakam.com

# நாளைய சந்ததிக்கு நடந்ததைக் கூறு

எம் பிரியநண்பா!
இந்த மண்ணை விட்டு,
இந்த மக்களை விட்டு,
நாம் பிரியலாம்
ஆனால்
நீயோ உன் சந்ததியோ
பிரிய முடியாது;
பிரியவும் கூடாது.
எனவே
இன்றைய தர்மயுத்தத்தை
நாளைய சந்ததிக்குக் கூறு.

உன்னைப் போல்
எம்முடன்
உள்ளன்போடு
உறவாடியவர்
யாருமே இல்லை.
எனவே
நடந்ததைக் கூறு.



படிப்பகம்

www.padippakam.com

உன்னை
கற்பகதரு என
போற்றியவர்கள்
நிச்சயம் நீ
எமக்கு 'கவர்' ஆகும்
கருத்தை
கற்பனையில்
சேர்த்திருக்கவே
மாட்டார்கள்.

உக்கிரமான
யுத்தத்தில்
எம்முடன்
உறுதியோடு
துணையிருந்தவன்
நீ மட்டுமே
என்பதனால்
நாளைய சந்ததிக்கு
நடந்ததைக் கூறு.

எம்
எல்லைகளெல்லாம்
நீ நெருங்கி
நிற்பதால்
எம் இழப்புகள்
கணிசமான அளவு
குறைந்து போனதை
எடுத்துச் சொல்லு



படிப்பகம்

www.padippakam.com

எம்மைத் துளைக்க வேண்டிய
எத்தனை
குண்டுகளை
நீ சுமப்பதை
அத்தனை
"செல்" துண்டுகள்
உன்வைர மேனியை
ஊடுருவியதை
கூறுவாயா?

தோழனே!
கூடி நின்று
கதைத்தவர்கள்
அடுத்த நிமிடம்
மரணமானதை!
வேதனைகளை!
மனதுள்
மறைக்கமுடியாது.
உன்னில் மறைந்து
கண்களை
துடைத்துக் கொண்டதை
கூறுவாயா?

எம்மை
உளவு பார்க்க
ஆகாயத்தில்
திடீர்திடீரென
வட்டமடிக்கும்



படிப்பகம்

www.padippakam.com

அந்த
வல்லூறுகளுக்கு
மறைய
உன்னை.......
சுற்றிச்சுற்றி......
மறைந்து
அவன்
தீர்க்கும்
வேட்டுக்களை
நீ வேண்டிக் கொண்டதை
கூறுவாயா?

மாளிகையில்
வாழ்ந்ததை விட
உன்
ஒற்றைமர நிழலில்
காவல் இருந்ததை,
சந்தோசமாக
நினைத்ததை,
பஞ்சணையில்
படுத்ததை விட
பசும் புல்லில்
சுகமாகத் தூங்கியதை,
மழையில் நனைந்து
அடுத்த ஆடை மாற்றாது
"பொஸிசனில்" நின்றதை,
பசி மறந்து
தூக்கம் மறந்து
எதிரி எல்லையை
மீறுவதாயின்



படிப்பகம்

www.padippakam.com

எம் உடம்புகளின்
மேலாகத்தான்
என்ற
உறுதியோடு
காவலிருந்ததை
கூறுவாயா?

இந்த
புனித பூமி
மீண்டும்
களங்கப்படக் கூடாது
எனவே!
அடுத்த சந்ததிக்கு
வரலாறு தெரிய வேண்டும்.
தோழனே!
உண்மையைக் கூறு.
எல்லை காக்கப்படவேண்டும்
உண்மையைக் கூறு.

எந்த நிமிடத்திலும்
மரணத்தை
சந்திக்கத் தயாராயிருந்ததால்
ஒற்றைக் காலை
உன்னில் ஊன்றி
மனதைத் தொட்ட
மகத்தான
உண்மைகளை நினைத்து
சந்தோசப்பட்டதை
கூறுவாயா?



படிப்பகம்

www.padippakam.com

பிரிய நண்பா!
எம் இரத்தத்தைக் கூட
உன் வேர்கள்
உறிஞ்சியுள்ளதால்
உன்னிடமும்
எம் இலட்சியம்
உயிர் பெற்று விட்டதால்,
கடமை
உனக்கும்
கட்டளையிடுவதால்
அடுத்த சந்ததிக்கு
கட்டாயமாகக் கூறு

உன்னை விட
உணர்வு பூர்வமாய்
சொல்லக் கூடியவர்கள்
யாருமே இல்லை.
எனவே
மண்ணின் மகத்துவத்தை
வருங்கால
மைந்தர்களிடம்
கட்டாயமாகக் கூறு.

உனக்குத் தெரியும்
எம்
தலைவனை
நாம் எப்படி நேசித்தோம்
எப்படி மதித்தோம்.
எப்படி
வாழ்ந்தோம் என்பதெல்லாம்



படிப்பகம்

www.padippakam.com

அவன்
சுட்டு விரல்
அசைப்பில்
எத்தனை சக்தி
என்பது நீ அறிந்ததே
எத்தனை
அழுத்தங்களின்
பின்னாலும்
எழுந்து நிற்கிறோம் என்றால்
அது அவன்
கட்டளையின் சிறப்பு
பிறக்கப் போகும் தமிழீழத்தை
நிச்சயம் நீ காண்பாய்.
எனவே
அடுத்த சந்ததிக்குக் கூறு.
தமிழீழத்தில்
தன்மானம் விலை போகக் கூடாது
என அடித்துக் கூறு.

நாளை
உன் நிழலில்
நான் மடியலாம்.
என் குருதியையும்
உன்
வேர்கள்
உறிஞ்சலாம்.
என் நினைவுகளும்
உன்னுள்
காவலிருக்கலாம்,
தமிழீழத் தாயகத்தை
பார்த்து மகிழலாம்.



படிப்பகம்

www.padippakam.com

எனது
கைகள்
நாளை ஓயலாம்,
அன்றி
ஓடியலாம்
ஆனால்....
எனது பேனாவோ
ஓயப்போவதில்லை
எமது
துப்பாக்கியைப் போல!

கப்டன் வானதி

வெளியீடு:
வெளியீட்டுப் பிரிவு
தமிழீழ விடுதலைப் புலிகள்

படிப்பகம்